திரித்துவக் குடும்ப மாதாந்திர மலர்

# திரித்துவச்சுடர்

தனிச்சுற்றுக்கு மட்டும்

holytrinityggnagar.com YouTube: Trinity Ripples

மார்ச் 2024



தவக்காலத்தை சித்தரிக்கும் வகையில் நமது பங்கு இளைஞர்களால் வடிவமைக்கப்பட்ட கல்வாரி திருச்சிலுவை.

## பங்கின் இலக்கு

### PARISH VISION STATEMENT

தூய தமத்திரித்துவ பங்கு மக்களாகிய நாங்கள் இயேசுவின் சீடர்களாக, அருள் வாழ்வின் குழுமமாக, திருவழிபாடு, அருட்பணி, அனைவரையும் உள்ளடக்கிய பணிகளின் வழியாக இயேசுவின் கனவான இறையாட்சியை இம்மண்ணில் கட்டியெழுப்ப அழைக்கப்பட்டுள்ளோம்.

WE THE PEOPLE OF HOLY TRINITY PARISH AS A COMMUNITY OF DISCIPLES OF JESUS CHRIST ARE CALLED TO BUILD HERE ON EARTH THE KINGDOM OF GOD, THE DREAM OF JESUS CHRIST THROUGH LITURGY AND INCLUSIVE PASTORAL MINISTRIES.

## திருத்தந்தையின் மன்றாட்டுக்கருத்து



புதிய தியாகிகளுக்காக: உலகின் பல்வேறு பகுதிகளில் திருவிவிலியத்திற்காக தங்கள் உயிரைப் பணயம் வைப்பவர்கள், தங்கள் தைரியத்தாலும், மறைபரப்பு பணி ஆர்வத்தாலும் திருச்சபையைத் தூண்டிவிட வேண்டும் என்று மன்றாடுவோம்.

For the new martyrs: We pray that those who risk their lives for the Gospel in various parts of the world inflame the Church with their courage and missionary enthusiasm.

## அன்பிய இறைவார்த்தை – மார்ச்

### யோசுவா 6: 12-16

## பங்குத் தந்தையின் செய்தி

தூய தமத்திரித்துவத்திற்குள் என் அருமையான பங்கு மக்களே, உங்கள் அனைவருக்கும் வாழ்த்துகளும், இறைஆசிரும். கடந்த பிப்ரவரி மாதத்தை இறைவன் நமக்கு தந்து அவர் அருளில் வழிநடத்தியதற்காக நன்றி கூறுகிறோம். பிப்ரவரி 14 ம் தேதியிலிருந்து தவக் காலத்தை தொடங்கியுள்ளோம். இதை சிறந்த முறையில் திட்டமிட்டு உள்ளார்ந்த மனமாற்றத்தோடு, கிறிஸ்துவோடு மரித்து கிறிஸ்துவோடு உயிர்த்து எழுவோம். நமது திருத்தந்தை தவக் காலத்திற்கான செய்தியை வழங்கி உள்ளார்கள். இதனுடைய மையக் கருத்தாக, கடவுள் இஸ்ரேயல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து அவர்களுக்கு விடுதலை வழங்கியது போல, நமக்கும் விடுதலை வழங்குவார். தவக்காலம் அருளின் காலம், இக்காலத்தில் சமூகத்தின்மேல் அக்கறையற்ற போக்கைத் தவிர்த்து, பொறுப்புள்ள மக்களாய் வாழ அழைக்கப்படுகிறோம். நமது வாழ்வில் அமைதியான தருணங்களை உருவாக்கி, கடவுளின் வார்த்தையை உள்வாங்கி, ஆழமான ஆன்மீகத்தை கட்டி எழுப்புவோம். தவக்ககாலதிற்கான நல்ல செயல்பாடுகளை அதிகப்படுத்துவோம்.

**Dear Friends, Greetings to all of you in the Holy Trinity. The Lord has given Lent for our growth in spiritual life. Let us plan this period in the best possible way, die with Christ and rise with Christ. Holy Father Francis has given an inspiring message for Lent 2024. Its central idea is that just as God freed the Israelites from slavery in Egypt, He will also provide freedom for us. Lent is a time of grace, during which we are called to live as responsible people. Let's create quiet moments in our lives, absorb God's Word and build deep spirituality. So, let's plan concrete steps in Lent.**

உங்கள் அன்பு பங்குப் பணியாளர்
பீட்டர் தும்மா

# பிப்ரவரி கொண்டாட்டங்கள்

## 11 மறைக்கல்வி சிறுவர்களின் உல்லாசப் பயணம்

மறைக்கல்வி சிறுவர்களின் உல்லாசப் பயணம் பிப்ரவரி 11 ஆம் தேதி நமது மறைக்கல்வி மாணவ மாணவிகள் மற்றும் மறைக்கல்வி குழுவினர் 114 பேர் MGM Dizzee World சென்று வந்தார்கள். அனைவருக்கும் அருமையான பொழுதுபோக்கு நாளாக அமைந்தது.

**On Feb 11, the catechism children and teachers went on a day's picnic to MGM Dizzee World. 114 children took part and it was a memorable day for them.**

## 11 உலக நாள்

பிப்ரவரி 11 ஆம் தேதி உலகின் புகழ் வாய்ந்த லூர்து அன்னையின் திருவிழாவை முன்னிட்டு உலக நல நாளாக நமது திருஅவை கொண்டாடுகிறது. அன்று நமது பங்கிலும் அன்பிய பொறுப்பாளர்கள், அன்பிய பெரியோர் பொறுப்பாளர்கள் மேற்கொண்ட முயற்சிகளால் பலபேர் திருப்பலியில் பங்கேற்று இறையாசீர் பெற்றனர்.

**February 11 (Sunday) was World Day of the Sick, an observation introduced by Pope John Paul II as a way for believers to offer prayers for those suffering from illnesses. The day coincided with the commemoration of Our Lady of Lourdes and was an important opportunity for those who served in the Catholic health ministry.**

## 14 திருநீற்றுப் புதன்

பிப்ரவரி 14 ஆம் தேதி திருநீற்றுப் புதனை நாம் சிறப்பித்தோம். இரண்டு திருப்பலிகளிலும் அதிகமான மக்கள் பங்கெடுத்தது மகிழ்ச்சியை தருகிறது. இத் தவக்காலத்தை கவனத்தோடு சிறப்பாய் பயன்படுத்துவோம்.

**On February 14 we started the season of Lent with Ash Wednesday. There was good participation for both masses. Consciously, let's plan this Lent well and follow it.**

## 14 கல்வாரி திருச்சிலுவை

தவக்காலத்தின் உட்பொருளை என்றும் நம் கண்முன் நிறுத்துவதற்காக, திருச்சிலுவையானது ஆலயத்தின் முன் நமது இளைஞர்களின் முன்னெடுப்பில் நிறுவப்பட்டுள்ளது. திருச்சிலுவையினால் நாம் மீட்கப்பட்டுளோம் என்கிற உண்மையை உள்வாங்கி உயிர்ப்பின் மக்களாய் உருபெருவோம்.

**The greatest symbol of God's mercy is the Holy Cross. In order to keep before our eyes the meaning of Lent, the crucifix is placed in front of the church. It's an initiative by the church youth group.**

## 17 மரியாயின் சேனையினர் வழிநடத்திய சிலுவைப்பாதை

பெப்ரவரி மாதம் – 17 ஆம் தேதி சனிக்கிழமை மாலை 4 மணி அளவில், மரபுவழி சிரியன் ஆலய பகுதியிலிருந்து சிலுவைப் பாதையானது நமது மரியாயின் சேனையினாரால் நடத்தப்பட்டது. நமது வீதிகளில் சிலுவைப் பாதை செய்யப்பட்டதை கண்டு ஆண்டவரின் பாடுகளைப் பற்றி பொதுமக்கள் சிறிது தெரிந்து கொண்டிருப்பார்கள் என நம்புவோம்.

**On February 17 (Saturday), the members of the Legion of Mary led the Stations of the Cross from the Syrian Orthodox Church through the streets of Mogappair. Hope the public should have got to know about our Lord's suffering.**

## 21 1000 மணி செபமாலை

நமது மரியாயின் சேனையினரின் முயற்சியில், பெப்ரவரி 24 ஆம் தேதி சனிக்கிழமை நமது நாட்டிற்காகவும், குறிப்பாக இன்னும் ஓரிரு மாதங்களில் நடைபெறவுள்ள பொது தேர்தல்– 2024, சிறப்பாய் அமைந்திட 1000 மணி செபமாலை காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. நாமும் நமது அன்றாட மன்றாட்டுகளில் இந்த சிறப்பு கருத்திற்காக வேண்டிக்கொள்வோம்.

**The Legion of Mary members organized a 1000 Beads Rosary on Feb 24 from 10.00 a.m. to 4.00 p.m. for our country and especially for the general election- 2024. May the Lord help us to get good Leaders.**

## 25 புனிதர்களின் திருப் பண்டங்கள் கண்காட்சி

புனிதர்களின் திருப் பண்டங்கள் கண்காட்சி இத்தவக்காலத்தின் இன்னொரு நல்ல முயற்சியாக ஏறக்குறைய 90–க்கும் மேற்பட்ட புனிதர்களுடைய திருப் பண்டங்கள் நம் பங்கு மக்களின் பார்வைக்கு காட்சிப் படுத்தப்பட்டன. இந்த புனிதர்களின் பரிந்துரையால் நமது தவக்கால முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும் என நம்புவோம். இதற்கான ஏற்பாடுகளை செய்த நமது பங்கின் மரியாயின் சேனை, இளையோர் குழு, அன்பியங்களின் இளையோர் பொறுப்பாளர்கள் மற்றும் திருப் பண்டங்கள் கொடுத்து உதவி புரிந்த கோடம்பாக்கம் திரு.ரெக்ஸ் உள்ளடக்கிய அனைவருக்கும் நமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

**As another good effort of this season, the relics of more than 90 Saints were displayed to the public. By the intercession of these Saints, let us hope that all our Lenten endeavors will be successful. The parish thanks the Legion of Mary, youth group, BCC youth representatives and Mr. Rex of Kodambakkam, who helped in getting the relics.**

## 26 மாணவ மாணவிகளுக்கான சிறப்பு ஆசீர்

மாணவ மாணவிகளுக்கான சிறப்பு ஆசீர் இந்த ஆண்டு தங்களுடைய அரசு பொது தேர்வுகளை எழுத இருக்கும் அனைத்து மாணவ மாணவிகளுக்கான சிறப்பு திருப்பலியும் ஆசீரும் பிப்ரவரி 25 ஆம் தேதி ஞாயிறு அன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அநேக மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். நல்ல முறையில் தேர்வுகள் எழுதி வெற்றி பெற தொடர்ந்து மன்றாடுவோம், வாழ்த்துகிறோம்.

**A special mass and blessing was organised on February 25 (Sunday) for all the students who were going to appear for their government public examinations this year. Many students participated. May the Lord grant them wisdom and victory.**

## ஆங்கிலத் தவக்கால தியானம்

தவக்கால தியானம் ஆங்கிலத்தில் மார்ச் 10 ஆம் தேதி ஞாயிறு காலை 10.30 மணி முதல் 1.00 வரை இளைஞர்களுக்கும், மதியம் 2.00 மணி முதல் மாலை 5.15 வரை பொது மக்களுக்கும் நடைபெறும். அனைவரும் பங்கு பெற அன்புடன் அழைக்கிறோம்.

**Lenten retreat in English will be held on March 10 (Sunday). From 10.30 a.m. to 1.00 p.m. for the youth and from 2.00 to 5.15 p.m. for the general public followed by mass at 5.30 p.m. All are requested to make use of this opportunity to experience God's love and mercy. Fr. Michael Augustine, SCJ will animate the retreat.**

# யூபிலி ஆண்டு – 2025

யூபிலி / ஜூபிலி எனும் சொல் மன்னிப்பின் பெருவிழா அல்லது மகிழ்ச்சியின் பெருவிழா என பொருள்படும். யூபிலி ஆண்டு என்பது மன்னிப்பு தேடுவோரின் பாவங்களை இறைவன் மன்னிப்பதும், வறியவர்களின் திருப்பி தர முடியாத கடன்களை நாம் பெருந்தன்மையுடன் மறந்து விடுவதும் மற்றும் உலகளாவிய மக்களின் மன்னிப்புக்கான சிறப்பு ஆண்டாகவும் கருதப்படுகிறது. லேவியராகமத்தில், ஒவ்வொரு 50வது வருடத்திற்கும் ஒரு யூபிலி வருடம் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த குறிப்பிட்ட ஆண்டுகளின் போது அடிமைகள் மற்றும் கைதிகள் விடுவிக்கப்படுவதையும், கடன்கள் மன்னிக்கப்படுவதையும், மற்றும் கடவுளின் கருணை குறிப்பாக வெளிப்படுவதையும் நாம் திருவிவிலியத்தில் படித்து தெரிந்து கொள்ளலலாம். மேற்கத்திய கிறித்துவத்தில் யூபிலி ஆண்டின் பாரம்பரியம், திருத்தந்தை எட்டாம் போனிஃபேஸ் கி.பி.1300 ஆம் ஆண்டில் முதன் முதலாக புனித ஆண்டை அறிவித்தத்தில் இருந்து தொடங்கியுள்ளது. அதைத் தொடர்ந்து வழக்கமான யூபிலிகள் ஒவ்வொரு 25 அல்லது 50 ஆண்டுகளுக்கு ஒருமுறையென கொண்டாடப்பட்டு வருகின்றன. கத்தோலிக்க திரு அவையின் யூபிலிகள், உரோமை நகரத்திற்கு நம்மை திருப்பயணம் மேற்கொள்ள அழைக்கின்றது என்பதை அறிந்துகொள்வோம்.
நமது திருத்தந்தை பிரான்சிஸ், 2025 ஆம் ஆண்டினை யூபிலியின் வருடமாக அறிவித்துள்ளார்கள். யூபிலி விழா – 2025, கத்தோலிக்க திருஅவையின் 31 வது யூபிலி வருடவிழா என்பது குறிப்பிடத்தக்கது. நம்பிக்கையாளரின் திருப்பயணம் என்ற கருத்தினை முன்னிறுத்தி கொரானா மற்றும் போர்களால் நம்பிக்கை தளர்ந்துபோன இவ்வுலகிற்கு நம்பிக்கை ஊட்டுவதற்காக இந்த மையக் கருத்து தேர்வு செய்யப்பட்டுள்ளது. திரு அவை முழுவதும் நல்ல தயாரிப்புகளை பல நிலைகளில் முன்னெடுத்து உள்ளனர். நமது பங்கிலும் இத்தயாரிப்புகளை சிறப்பாகச் செய்து, நமது விசுவாசத்தை ஆழப்படுத்தி புதுப்பித்துக் கொள்வோம்.
கூடுதல் தகவலாக, ரோமானிய பேரரசர் முதலாம் கான்ஸ்டன்டைன் அழைப்பின் பேரில், துருக்கியின் நிக்கேயா (இன்றைய இஸ்னிக்) நகரில் கி.பி. 325 இல் நடைபெற்ற முதல் அமர்வின் 1700 ஆம் ஆண்டு விழா இந்த ஆண்டை ஒட்டி நினைவு கூறப்படுகிறது என்பதையும் அறிந்துகொள்வோம். இந்த அமர்வின் போதுதான், உலகமெங்கும் ஒரே நாளில் ஈஸ்டர் பெருநாள் கொண்டாடப்பட உறுதிமொழியும், ஆரம்பகால கத்தோலிக்க திருஅவை சட்டத்தின் (Canon Law) வழிகாட்டுதல்களும் ஒப்புதல் பெறப்பட்டு அறிவிக்கப்பட்டன.

**Our Holy Father has decided that 2025 will be a year of Jubilee, something which happens every 25 years. It is considered to be a special year when God forgives the sins of those who seek forgiveness. The tradition of the Jubilee Year in Western Christianity dates back to Pope Boniface VIII's first proclamation of the Holy Year in 1300 AD. Thereafter regular jubilees are celebrated every 25 or 50 years and the Catholic Church invites us to make a pilgrimage to Rome. During these specific years we read in the Bible that slaves and prisoners were set free, debts were forgiven and God's mercy was especially manifested. In our parish we will be involved in this preparation and get the blessings of the Lord Almighty.**

## தவக்கால தியானம்

தவக்காலத்தில் நாம் நடத்துகின்ற முக்கியமான நிகழ்வுகளில் ஒன்று தவக்கால தியானம். மாதா தொலைக்காட்சியின் அருள் தந்தையர்கள் முன்னெடுத்து நடத்துகின்ற தியானம் இந்த ஆண்டு மார்ச் மாதம் 1, 2, மற்றும் 3 ஆகிய தேதிகளில் நடை பெற உள்ளது. இத்தியானம் சிறப்பாக நடை பெறவும், மக்களின் பங்கேற்பு கூடுதலாக இருக்கவும் மன்றாடுவோம். ஒவ்வொரு நாளும், தியானம் முடிவடைந்தபின், பங்கேற்ற அனைவருக்கும் உணவு வழங்கப்படும். இதற்காக உதவி செய்ய விருப்பம் உள்ளோர், பங்குத் தந்தையை தொடர்பு கொள்ளவும்.

**Lenten Retreat is one of the important activities in Lent and it will be held from March 1 to 3. Fathers of Madha Television Network will conduct it. Please pray for the success of the retreat. Meals will be provided on all days. If anyone is interested in sponsoring food, kindly contact the Parish Priest.**

## தவக்கால தியாக உண்டியல்



அனைத்து குடும்பங்களுக்கும் தவக்கால தியாக உண்டியல் அந்தந்த அன்பிய பொறுப்பாளர்கள் வழியாக தந்துள்ளோம். உங்கள் தியாக காணிக்கைகளை தாராளமாய் தந்து நமது பங்கில் உள்ள ஏழைக் குடும்பங்களுக்கு உதவ அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம். இத்தியாக உண்டியலை பெரிய வியாழன் திருப்பலியில் காணிக்கையாகக் கொண்டுவரவும்.
இந்த சிறப்பு காலத்தை எல்லோரும் பயன் உள்ள முறையில் கொண்டாட அழைக்கிறோம். அனைத்து அன்பியங்களும், பக்த சபைகளும் மற்ற குழுக்களும் அதிக ஆர்வத்தோடு நல்ல முறையில் திட்டமிட்டு செயல்படுத்த அன்புடன் வேண்டுகிறோம்.
தவக்காலத்தின் அனைத்து வெள்ளிக் கிழமைகளிலும் மாலையில் தமிழில் சிலுவைப் பாதையும், அனைத்து புதன் கிழமைகளிலும் மாலையில் ஆங்கிலத்தில் சிலுவைப் பாதையும் நடைபெறும்.
மற்ற தவக்கால நிகழ்வுகள் மற்றும் புனித வார நிகழ்வுகளை உங்களுக்கு தனியாக அச்சடித்து வழங்கியுள்ளோம்.
இயேசுவின் சிலுவைப்பாடுகள், மரணம் மற்றும் உயிர்ப்பில் பங்குக் கொள்ள அனைவரையும் ஒப்புரவு அருட்சாதனத்திற்கு அன்புடன் அழைக்கிறோம்.

**Lenten dumb boxes have been given to each family through their BCC coordinators. Please be generous to help the poor in our parish. The dumb boxes can be brought and handed over during mass on Maundy Thursday.**

## தவக்கால திருப்பயணம்

மார்ச் மாதம் 8, 9, 10 தேதிகளில் நம் பங்கின் வெள்ளி விழா தவக்கால திருயாத்திரையை ஏற்பாடு செய்துள்ளோம். 127 பேர் இதில் கலந்து கொள்கின்றனர். மறைசாட்சியான புனித தேவசகாயம் தொடர்புடைய திருத்தலங்களையும், திருவனந்தபுரத்தில் சில ஆலயங்களையும் காண உள்ளோம். பயணம் சிறப்புடன் அமைய பற்பல முன்னேற்பாடுகளை செய்து கொண்டிருக்கும் திருப்பயணக் குழுவினர்களுக்கு நம் நன்றியும் வாழ்த்துகளும். இத் திருப்பயணம் சிறப்பாய் அமைந்திட அனைவருடைய ஒத்துழைப்பையும் கோருகிறோம்.

**On March 8, 9 and 10, our church has organised the Silver Jubilee Lenten Pilgrimage. 127 people have confirmed. The team will visit shrines connected to Martyr Saint Devasahayam and a few churches in Trivandrum. The Pilgrimage committee has done a detailed preparation.**




## "சிங்கப் பெண்களே..."

### (உலக மகளிர் நாள்)

உலக மகளிர் நாளை ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 8 ஆம் தேதி கொண்டாடுகிறோம். பெண்களை பாராட்டுவதற்காகவும், பெண்கள் வளர்ச்சியை ஊக்கப்படுத்துவதற்காகவும், சமூக ஏற்றத் தாழ்வுகள் களைவதற்காகவும், அனைவரின் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. நமது பங்கில் மார்ச் மாதம் 18 ஆம் தேதி அன்று இந்நாள் கொண்டாடப்படும். அனைத்து மகளிரும் இந்நாளின் கொண்டாட்டங்களில் பங்கெடுத்து பயன்பெற அன்புடன் அழைக்கிறோம். இந்த நாளின் நிகழ்வுகளை நமது அன்பிய பெண்கள் குழுவினர் ஒருங்கிணைத்து நடத்த உள்ளனர்.

**International Women's Day is celebrated on March 8 every year. This celebration should help one to have a good awareness about gender equality, poverty among women and legal protection for women. We are organizing this celebration on March 18 in our parish and we welcome all women to be part of it. The events of this day will be conducted by Anbiam Women's group.**

# திருவழிபாட்டு நாட்கள்

**03.03.2024 தவக்காலத்தின் 3–ம் ஞாயிறு**

விப 20: 1–17, திபா 19: 7. 8. 9. 10
(பல்லவி: யோவா 6: 68)
கொரி 1: 22–25, யோவான் 2: 13–25

**10.03.2024 தவக்காலத்தின் 4–ம் ஞாயிறு**

2குறிப்பேடு 36: 14–16, 19–23, திபா 137: 1–2. 3. 4–5. 6
(பல்லவி:6a) எபே 2: 4–10, யோவான் 3: 14–21

**17.03.2024 தவக்காலத்தின் 5ம் ஞாயிறு**

எரே 31: 31–34, திபா 51: 1–2. 10–11. 12–13 (பல்லவி: 10a)
எபி 5: 7–9, யோவான் 12: 20–33

## புனித வாரம்

**24.03.2024 குருத்து ஞாயிறு**

குருத்தோலைப் பவனி நற்செய்தி வாசகம்
மாற்கு 11: 1–10, எசா 50: 4–7 திபா 22: 7–8. 16–17a.
18–19. 22–23 பிலி 2: 6–11, மாற்கு 14: 1– 15: 47

**28.03.2024 ஆண்டவரின் இராவுணவுத் திருப்பலி**

விப 12: 1–8, 11–14, திபா 116: 12–13. 15–16. 17– 18,
1கொரி 11: 23–26, யோவான் 13: 1–15

**29.03.2024 திருப்பாடுகளின் வெள்ளி**

எசா 52: 13– 53: 12, திபா 31: 1,5. 11–12. 14–15. 16, 24,
எபி 4: 14–16; 5: 7–9, யோவான் 18: 1– 19: 42

**30.03.2024 பாஸ்கா திருவிழிப்பு**

1. தொநூல் 22: 1–181: 1– 2: 2, திபா 104: 1–2a. 5–6. 10, 12. 13–14. 24,35c
2. தொநூல் 22: 1–18, திபா 16: 5, 8. 9–10. 11
3. விப 14: 15– 15: 1 விப 15: 1–2. 3–4. 5–6. 17–18
4. எசா 54: 5–14 திபா 30: 1, 3. 4–5. 10, 11a, 12b
5. எசா 55: 1–11 எசா 12: 2–3. 4bcd. 5–6
6. பாரூ 3: 9–15, 32– 4: 4 திபா 19: 7. 8. 9. 10
7. எசேக் 36: 16–17a, 18–28 திபா 42: 2, 4abc; 43: 3, 4

திருமுகம் உரோ 6: 3–11 திபா 118: 1–2. 16ab–17. 22–23
நற்செய்தி வாசகம் மாற்கு 16: 1–7

**31.03.2024 ஆண்டவருடைய உயிர்ப்பின் பாஸ்கா ஞாயிறுபெருவிழா**

திப 10: 34a, 37–43, திபா 118: 1–2. 16–17. 22–23,
கொலோ 3: 1–4, யோவான் 20: 1–9

## நமது பங்கின் பிப்ரவரி மாத அருட்சாதன நிகழ்வுகள்

### திருமுழுக்கு

- பி ருஹறன் ரோலக்ஸ்

**வரவேற்கிறோம்**



## உலக நாட்கள் - மார்ச் 2024

| | | |
|---|---|---|
| மார்ச் 3 | : | உலக வன விலங்கு நாள் |
| மார்ச் 4 | : | தேசிய பாதுகாப்பு நாள் |
| மார்ச் 8 | : | சர்வதேச மகளிர் நாள் |
| மார்ச் 15 | : | உலக நுகர்வோர் உரிமைகள் நாள் |
| மார்ச் 16 | : | தேசிய தடுப்பூசி நாள் |
| மார்ச் 18 | : | உலக உறக்க நாள் |
| மார்ச் 21 | : | உலக கவிதை நாள் |
| மார்ச் 21 | : | சர்வதேச காடுகள் நாள் |
| மார்ச் 22 | : | உலக தண்ணீர் நாள் |
| மார்ச் 23 | : | உலக வானியல் நாள் |
| மார்ச் 24 | : | உலக காசநோய் நாள் |

# யூபிலி ஆண்டின் மகிமை

ஒரு ஜூபிலி / யூபிலி ஆண்டு என்பது கருணையின் சிறப்பு ஆண்டாகும். மனம் வருந்தி தங்களின் பாவங்களை முறையிட்டு இறைவனிடம் முழு மன்னிப்பை பெறவும், அப்படி பெற்றபின் இறந்து போன தங்களின் உறவினர்கள் மற்றும் நண்பர்களின் பாவங்களை மன்னிக்க கோரும் உரிமையையும் கத்தோலிக்க திருச்சபை தனது விசுவாசிகளுக்கு வழங்கும் ஒரு அற்புத ஆண்டு. இந்த ஆண்டை முழுமையான விதத்தில் பயன்படுத்திக்கொண்டால் நம் உள்ளம் முழுமையான திருப்தியையும், உவப்பையும் அடையும் என்பதில் துளியும் சந்தேகம் இல்லை. கத்தோலிக்க திரு அவையில் யூபிலி ஆண்டு திருத்தந்தையால் அழைக்கப்பட்டாலும், அது இறைவனாலேயே தேர்ந்துகொள்ளப்பட்டு, அழைப்பு விடுக்கப்படுகிறது என்று நமது திருவிவிலியம் நமக்கு உணர்த்துகிறது. எசாயா 61:1–2 இல் 'ஆண்டவர் அருள் தரும் ஆண்டினில்' என்பதை நாம் ஒருமுறை படித்து புரிந்து கொள்வோம். இந்த வசனங்களை, நம் மீட்பர் இயேசு கிறிஸ்து தனது கலிலேய பணியின் தொடக்கத்தில், தன் சொந்த ஊரான நசரேத்தில் உள்ள தொழுகைக்கூடத்தில் படித்து தனது பணியை தொடங்கியது எவ்வளவு பொருத்தம் என்பதை எண்ணி வியக்காமல் இருக்க முடியாது (லூக்கா 4: 16–30). நம் ஆண்டவர் நமக்கு கற்றுத்தந்த "விண்ணுலகில் இருக்கும் தந்தையே" (லூக்கா 11:2–4) என்ற மன்றாட்டில் பாவங்கள் மன்னிப்பு பற்றியும், பூவுலகின் இறுதியில் மாட்சியுடன் வரவிருக்கும் கடவுள் அரசின் மாபெரும் யூபிலியை அன்றாடம் நாம் உணர்ந்து மகிழ்ச்சியுடன் அறிவிக்கவும் தெளிவுபடுத்துகிறார். புனித லூக்காவின் நற்செய்தி பணியாளர்கள் நூலில் 4: 32 வசனத்தை கூர்ந்து படித்தால், இறுதியில் வரவிருக்கும் யூபிலி ஆண்டை நினைவு கூர்ந்து நம்மையே தயாரிக்கும் வண்ணம் நமது அன்றாட வாழ்வில், யூபிலியைக் கொண்டாடுவது எப்படி இருக்க வேண்டும் என்பதில் தெளிவு காணலாம். ஒருவருக்கொருவர் தங்கள் பாவங்களையும் கடன்களையும் மன்னிப்பது மட்டுமல்லாமல் அவரவர்கள் வைத்திருக்கும் செல்வம் எல்லோருக்கும் பொதுவானது என்றும், அது அனைத்தும் கடவுளுக்கு சொந்தமானது என்றும் நாம் உணர வேண்டும் என்று திருவிவிலியம் நமக்கு படிப்பினை வழங்குகிறது.

இந்த யூபிலி ஆண்டின் அருமையை உணர்ந்து, முதலில் நம் பாவங்களுக்காக மன்னிப்பை பெற உறுதி எடுப்போம். பாவ மன்னிப்பு என்பது ஒப்புறவு அருட்சாதனத் தொட்டியில் குருவானவரிடம் பெறுவது ஒரு அடையாளம் மட்டும்தான். ஆனால் அதன் தொடக்கம், மனம்நொந்து, மனமுருகி நாம் இறைவனுக்கு எதிராகவும், நமக்கு நாமே எதிராகவும், நமது பெற்றோருக்கு எதிராகவும், நமது இல்வாழ்க்கை துணையாளருக்கு எதிராகவும், நமது பிள்ளைகளுக்கு எதிராகவும், நமது உறவினர்களுக்கு எதிராகவும், நமது நண்பர்களுக்கு எதிராகவும், நமது மேய்ப்பர்களுக்கு எதிராகவும், நமது சமூகத்திற்கு எதிராகவும் நாம் புரிந்த குற்றங்களை எண்ணிப்பார்த்து அவர்களிடமே நேரடியாக சென்று மன்னிப்பை பெறுவதில்தான் அடங்கும். யாரையெல்லாம் நாம் புண்படுத்தியிருக்கிறோமோ அவர்களிடம் மன்னிப்பை பெறாமல், குருவிடம் மண்டியிட்டு பாவசங்கீர்த்தனம் செய்வதால் எந்த பலனும் இல்லை. நம் உடன் வாழ்வினரோடு சமாதானம் செய்து கொள்ளாமல் அன்றாடம் ஆலயத்திற்கு செல்வதும், திருப்பலியில் பங்கு கொள்வதும், செபமாலை செபிப்பதும், திருத்தலங்களுக்கு செல்வதும், நன்கொடைகள் கொடுப்பதும் நம்மை இறைவனிடத்தில் ஒரு போதும் கொண்டு சேர்க்காது. வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளாய் வாழாமல், நறுமணம் கமழும் இறைவனின் உறைவிடமாய் நம் உள்ளங்களை இந்த யூபிலி ஆண்டில் மாற்றிட உறுதி பூண்டிடுவோம்.

# மறைக்கல்வி ஆண்டு விழா

மார்ச் மாதம் 16 தேதி சனிக்கிழமை மாலை 6 மணிக்கு ஞாயிறு மறைக்கல்வி ஆண்டுவிழா நடைபெற உள்ளது. இந்த ஆண்டு முழுவதும் இறைவன் நமக்கு செய்த அனைத்து நன்மைகளை எண்ணி கடவுளுக்கு நன்றி செலுத்துவதற்காகவும் நமது ஆசிரியர்கள் மறைக்கல்வி குழுவினரையும் மாணவ மாணவிகளையும் மற்றும் பெற்றோர்களை பாராட்டும் வண்ணமாக இந்த ஆண்டு விழா அமைய போகின்றது பங்கு மக்கள் அனைவரும் இவ்விழாவில் கலந்து கொள்ள அழைக்கிறோம்.



தவக்கால தொடக்க நிகழ்வான
திருநீற்று புதன் (14.02.2024)



தவக்கால தொடக்க நிகழ்வில் பங்குமக்கள் (14.02.2024)



மரியாயின் சேனையினர் வழிநடத்திய
சிலுவைப்பாதை (17.02.2024)



மறைக்கல்வி சிறுவர்களின்
உல்லாச பயணம் (11.02.2024)



மரியாயின் சேனையினரின்
ஆயிரம் மணி செபமாலை (24.02.2024)



நல்ல சமாரியன் குழுவினருடன் பங்குத்தந்தையர்



பீடச்சிறுவர்களின் சிலுவைப்பாதை (25.02.2024)



மாணவ மாணவிகளுக்கான சிறப்பு ஆசிர்வாதம் (25.02.2024)



பங்குமக்கள் தங்கள் விண்ணப்பங்களை
புனிதர்களின் பாதங்களில் சமர்ப்பித்தனர்.




புனிதர்களின் திருப்பண்டங்கள் கண்காட்சி (25.02.2024)


Arockia Sagayaraja A
Managing Director
Saffrawn
Facility Solutions Pvt Ltd.
Our Services
Housekeeping Services
Corporate Cleaning Services
Pest Control
Hotel & Restaurant Services
No.109 Padikuppam Main Road, Kamaraj Nagar, Anna Nagar West, Chennai-600040
Mail: saffrawnfacility@gmail.com Contact No.7823979791/9841892656
WWW.SAFFRAWN.IN


SONA COATING PVT. LTD.
Plot No. 2, Nithiyam Kamal, Spartan Nagar, Mugappair (East)
89396 56698 / 99419 58212 | Email: sonacoatingpvtltd@gmail.com
C SANTHOSH
www.sonacoating.in


YAHWEH PITSTOP
We Innovate Mobility
Address: No.84, 1st Main Road, Eri Scheme, Mogappair East, Ch-37.
Our Services:
Tyres
Wheel Alignment
Wheel Balancing
Puncture
Nitrogen
Foam Wash
Polishing & Detailing
Accessories
Sun Film
Seat Cover
Floor Mat
99405 21630 98409 15347
Door Step Assistance & Delivery



ROY ENGINEERINGS
ROY ENGINEERINGS
MOB: 9444911378 / 9600142309
Hexagon Nut
Thread Coupling
Worm Gear
VMC Tool Catcher
Helical Gear
VMC Atc Arm
Gear Shaft
Bevel Gear
Aluminium Flange
PB Worm Gear Shaft
PB Nut
Brass Gear Shaft
Spur Gear
Nylon Bush
PB Spur Gear


EICQU
STUDY ABROAD
& VISA
10+ COUNTRIES
100+ UNIVERSITIES
CONTACT US
08270871090
5th Floor, Awfis, Uthamar Gandhi Rd, opp. The Park Hotel, Nungambakkam, Chennai, Tamil Nadu 600034
More Information : www.eicqu.com


RAMESH
HARDWARES
DR. FIXIT
WATERPROOFING EXPERT
asianpaints
FinOlex
PIPES
Asian Paints | Sanitary Wares | Pipes
Fitting Godrej Locks | Welding Googs
Valaiyapathy Salai, Mogappair East
Mob: 79043 88322


WIGEON TOWERS
Property Developers
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
AISHWARYA AVENUE -1
Podavur Village kanchipuram,
Near Parandur
MADHAVARAM
Vadaperumbakkam
Perungavur-2
Chennai 600 103
SUMATHI AMMAL NAGAR
Oragadam Junction
Kunnavakkam
Kancheepuram District
R. Ramesh Babu
Manager
98849 88840
Layout only
Ph No: 044-4851 5365, 044-4767 1228


WIGEON
TECHNOLOGIES
P. ROSARIO JOHN KENNEDY
MANAGING DIRECTOR
96001 57835
Mfrs.of Jigs & Fixtures,
Press Tools & Machine
Spare Jig Boring
& Fabrication job works
No: 74/9, Periyar 5th cross street, Srinivasa Nagar, Padi
Ph no: 044- 26252333
Mail Id: wigeontech12@gmail.com


YOUR EASY AND FASTEST WAY OF GROCERY SHOPPING
SHOP NOW
ABEL
GROCERY STORE
Natural product with great price
SUPER SALE
44/20, Nehru Nagar, 1st street, Ambattur, Chennai - 600053
FOR MORE INFORMATION, CONTACT
ABEL MALIGAI MANDI - 9940172355
WHATSAPP ORDER FOR DOOR DELIVERY


R. INBARAJ
Proprietor
M: 9382139151
Manpower / staffing (Regular & Contractual)/ all the HR allied services
ROYAL ASSOCIATES
Placement & Consultants
(ISO 9001:2015 Certified Company)
3/475 Valayapathi Salai, Mugappair East, Chennai 600 037.
Tel: 26561970 Email: royalcorporate@gmail.com. www.royalassociates.co


NEWALL ENGINEERING WORKS
Mfrs of Cutting Tools &
Precision Engineering Components
M: 99401 54897, 98400 54817
www.newallengg.in